**அக்டோபர் – 16**

# TNPSC துளிகள்

- உகாண்டாவில் நடத்தப்பட்ட 64வது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் தமிழ்நாடு சட்டமன்றத்தின் சபாநாயகரான பி தனாபால் கலந்து கொண்டு உரையாற்றினார்.
- தமிழக முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களுக்கான சர்வதேச திரைப்படத் திருவிழாவின் 6வது பதிப்பானது திருவண்ணாமலையில் நடைபெற இருக்கின்றது.
- தேசிய அஞ்சல் வாரக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், 2019 ஆம் ஆண்டின் தக் சேவா விருதுகளை தமிழ்நாடு அஞ்சல் துறையில் பணியாற்றும் எட்டு ஊழியர்களுக்கு வழங்கினார்.
    - மேலும் உலக அஞ்சல் தினத்தின் 50வது ஆண்டைக் குறிக்கும் வகையில் விருதுகள் குறித்த சிறு புத்தகம் ஒன்றையும் அவர் வெளியிட்டார்.
- தமிழ்நாட்டில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான டாக்டர் சுதா சேஷயன் என்பவர் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அவர்களால் தேசிய மருத்துவ ஆணையத்தின் கீழ் உள்ள மருத்துவ ஆலோசனைக் குழுவின் (Medical Advisory Council - MAC) உறுப்பினராகப் பரிந்துரைக்கப் பட்டுள்ளார்.
    - MACயின் மூலம் மாநிலங்கள், மருத்துவக் கல்வி மற்றும் பிற பிரச்சினைகள் தொடர்பான தங்களது கவலைகளை ஆணையத்தின் முன் வைக்கும்.
- தனது ஒரு திட்டத்தின் கீழ் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டபடி, திருநங்கைகளுக்கும் ராஜஸ்தான் மாநில அரசு வேலையின்மை படித் தொகையை நீட்டித்துள்ளது. இவர்கள் தற்பொழுது மாதத்திற்கு ரூ 3,500ஐப் பெற இருக்கின்றனர்.
    - பட்டம் பெற்ற திருநங்கைகள் இச்சலுகைகளைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- முதல் முறையாக, கேரளாவில் உள்ள நிலத்தடி பாறை அமைப்புச் சூழலில் ஒரு புதிய விலாங்கு போன்ற அயிரை மீன் இனமானது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதற்கு பாங்கியோ புஜியா என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.
    - விலாங்கு இனமானது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, இந்தோனேசியா மற்றும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகள் ஆகியவற்றைச் சேர்ந்தவையாகும்.
- எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பின் மிகச்சிறிய உறுப்பினர் நாடுகளில் ஒன்றான ஈக்வடார் ஆனது நிதிப் பிரச்சினைகள் காரணமாக 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் 14 நாடுகளைக் கொண்ட இந்த அமைப்பில் இருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளது.
- சர்வதேச நாணய நிதியமானது (International Monetary Fund - IMF) இந்தியாவுக்கான பொருளாதார வளர்ச்சிக் கணிப்பை நடப்பு நிதியாண்டில் 6.1 சதவீதமாகக் குறைத்துள்ளது. 'உள்நாட்டுத் தேவையானது' எதிர்பார்த்த கண்ணோட்டத்தை விட பலவீனமாக இருப்பதுவே இதற்கு காரணம் என்று அந்த அமைப்பு மேற்கோள் காட்டியது.

# தேசியச் செய்திகள்

## ஏர் இந்தியா - டாக்ஸிபோட்களின் முதலாவது பயன்பாடு

- இந்தியாவின் தேசிய விமானச் சேவை நிறுவனமான ஏர் இந்தியாவானது ஏர்பஸ் விமானத்தின் மாற்று டாக்ஸி கருவியாக டாக்ஸிபோட்டைப் பயன்படுத்திய உலகின் முதலாவது விமான நிறுவனம் என்ற பெருமையைப் பெற்று வரலாற்றில் ஒரு இடத்தைப் பிடித்துள்ளது.
- டாக்ஸிபோட் என்பது ஒரு விமான ஓட்டியால் கட்டுப்படுத்தப்படும் ஒரு அரை இயந்திர மனிதனைக் கொண்ட விமான இழுவை இயந்திரம் ஆகும். இது விமான நிறுத்துமிடத்திலிருந்து ஓடுபாதைக்கும் ஓடுபாதையிலிருந்து விமான நிறுத்துமிடத்திற்கும் விமானத்தைக் கொண்டுச் செல்ல உதவுகின்றது.
- கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு மற்றும் விமான எரிபொருள் நுகர்வு ஆகியவற்றைக் குறைப்பதற்கு டாக்ஸிபோட்டுகள் பெரிதும் உதவுவதாகக் கூறப்படுகின்றது.
- இந்த இழுவை இயந்திரமானது அதன் பயன்பாட்டின் ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் வளிமண்டலத்தில் சேர்க்கப்படும் சுமார் 800 கிலோ அளவுள்ள நச்சு வாயுவைக் குறைக்கும் திறன் கொண்டது.
- இந்த விமான இழுவை வாகனமானது பிரெஞ்சு டிஎல்டி குழுமத்துடன் இணைந்து இஸ்ரேல் விமானத் தொழிற் சாலையால் உருவாக்கப்பட்டுள்ளது.




## உலகளாவிய பட்டினிக் குறியீடு - 102வது இடத்தில் இந்தியா

- உலகளாவிய பட்டினிக் குறியீட்டில் (Global Hunger Index - GHI) இந்தியா 2010 ஆம் ஆண்டில் 95வது இடத்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் 102வது இடத்திற்குச் சரிந்துள்ளது.
- இந்தக் குறியீட்டில் மொத்தம் 117 நாடுகள் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன.
- 2018 ஆம் ஆண்டு முதல், GHI ஆனது வெல்த்ஹங்கர்ஹெல்ஃப் மற்றும் கன்சர்ன் வேர்ல்டுவைட் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தால் (International Food Policy Research Institute - IFPRI) வெளியிடப் படுகின்ற ஒரு கூட்டுத் திட்டமாகும்.
- இந்தக் குறியீட்டில் தெற்காசிய நாடுகளிடையே மிகக் குறைந்த தரவரிசையில் இந்தியா உள்ளது. இந்தக் குறியீட்டில் பிற பிரிக்ஸ் நாடுகளுக்குப் பின்னால் இந்தியா இருக்கின்றது.


- தெற்காசியாவில் இந்தியாவிற்குப் பின்னால் தரவரிசைப் படுத்தப்பட்ட ஒரே நாடான பாகிஸ்தான் கூட, 2019 ஆம் ஆண்டின் தரவரிசையில் 94வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

***GHI மதிப்பெண்***

- GHI மதிப்பெண் ஆனது பின்வருவனவற்றின் அடிப்படையில் 2014 முதல் 2018 வரையிலான தரவை பிரதிபலிக்கின்றது.
    - ஒரு நாட்டில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் எண்ணிக்கையின் விகிதம்
    - உயரத்திற்கு ஏற்ற எடை இல்லாத அல்லது வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாத ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை
    - 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம்.
- இந்தியாவின் குழந்தை மெலிதல் விகிதமானது 20.8% (இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவிற்கு மிக அதிக குழந்தை மெலிதல் விகிதம்) என்ற அளவில் மிக அதிகமாக உள்ளது.
    - குழந்தை மெலிதல் விகிதம் – குழந்தை மெலிதல் அல்லது உயரத்திற்கு ஏற்ற எடையற்ற குறைந்த எடை கொண்ட குழந்தைகள் விகிதமானது ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையேயான இறப்பு விகிதத்தை முன்கூட்டியே வலுவாக கணிக்க உதவும் ஒரு கூறாகும்.

***"கடுமையான பட்டினிப்" பிரிவு***

- GHI ஆனது 100 புள்ளிகள் என்ற அளவில் நாடுகளை தரவரிசைப் படுத்துகின்றது. இந்தக் குறியீட்டில் உள்ள 0 ஆனது சிறந்த மதிப்பெண்ணையும் (பட்டினி இல்லாத) மற்றும் 100 ஆனது மிக மோசமான மதிப்பெண்ணையும் குறிக்கின்றது.
- இக்குறியீட்டில் இந்தியாவின் மதிப்பெண் 30.3 ஆக உள்ளது. இந்தியா இக்குறியீட்டில் கடுமையான பட்டினிப் பிரிவில் இடம் பிடித்துள்ளது.
- காலநிலை மாற்றமானது உணவின் தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பைக் கடுமையாக பாதிக்கின்றது. இது பயிரிடப்பட்ட உணவின் ஊட்டச்சத்துத் தரத்தை மிகவும் மோசமாக்குகின்றது.



# சர்வதேசச் செய்திகள்

## சீனாவின் அதிகாரப்பூர்வ டிஜிட்டல் நாணயம்

- சீனா தனது சொந்த டிஜிட்டல் நாணயத்தை அறிமுகப்படுத்த இருக்கின்றது.
- மெய்நிகர் நாணயங்கள் போன்ற ரகசிய டிஜிட்டல் நாணயங்கள் டிஜிட்டல் முறையை விட்டுப் பயனர்கள் வெளியேறாமல் அவற்றை வாங்கவும் விற்கவும் அனுமதிக்கின்றது.
- ஆனால் சீனாவின் மின்னணு - பண முறைமையானது சீனாவின் மத்திய வங்கியான சீன மக்கள் வங்கியால் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப் படுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## யானைகளுக்கு மீது சிவப்பு மிளகாய்த் தூள் பயன்படுத்த தடை – உத்தரகாண்ட்

- பொது நல மனுவிற்கு பதிலளிக்கும் விதமாக, யானைகளின் நடமாட்டத்தைப் பாதிக்கும் வகையில் மிளகாய் தூள் மற்றும் பட்டாசுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு உத்தரகாண்ட் உயர் நீதிமன்றம் வனத் துறைக்கு உத்தரவிட்டுள்ளது.
- யானைகள் ராம் நகரில் இருந்து கார்பெட் புலிகள் காப்பகம் வரைப் பயணித்து, பின்பு அங்கிருந்து கோசி நதி வரை பயணிக்கின்றன.
- கோசி நதியை அடைய, இந்த விலங்கினம் மூன்று யானை வலசைப் பாதைகள் வழியே தேசிய நெடுஞ்சாலை 121 ஐக் கடந்து செல்ல வேண்டும்.
    - கோட்டா யானைகள் வலசைப் பாதை
    - சில்கியா - கோட்டா யானைகள் வலசைப் பாதை
    - தெற்கு பட்லிடூன் - சில்கியா யானைகள் வலசைப் பாதை.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## புனை கதைக்கான புக்கர் பரிசு

- கனடாவைச் சேர்ந்த எழுத்தாளரான மார்கரெட் அட்வுட் மற்றும் பிரிட்டிஷ் எழுத்தாளரான பெர்னார்டின் எவரிஸ்டோ ஆகியோர் 2019 ஆம் ஆண்டின் புக்கர் பரிசின் வெற்றியாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- இவர்கள் இந்த இலக்கிய விருதின் 50,000 பவுண்டு மதிப்பிலான நிதித் தொகையைச் சமமாகப் பிரித்துக் கொள்ள இருக்கின்றனர்.
- புக்கர் விதிகள் இந்தப் பரிசைப் பிரிக்கக் கூடாது என்று கூறுகின்றன. ஆனால் இந்தப் பரிசின் நடுவர்கள் இந்த இரண்டு படைப்புகளையும் "பிரிக்க முடியாது" என்று வலியுறுத்தியுள்ளனர்.
- இது 1969 ஆம் ஆண்டு முதல் மேன் குழுமத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

### *பெர்னார்டின் எவரிஸ்டோ*

- புத்தகம்: சிறுமி, பெண், மற்றவை (Girl, Woman, Other).
- புக்கர் பரிசை வென்ற ஒரே கருப்பினப் பெண்மணி எவரிஸ்டோ ஆவார். இவருடைய

வயது 60 ஆகும்.

- இவரது புத்தகமானது நவீன கால ஐக்கிய ராஜ்ஜியத்தில் வாழும் கறுப்பினப் பெண்களின் வாழ்க்கையையும் அவர்களின் பல்வேறு போராட்டங்களையும் ஆராய்கின்றது.

*மார்கரெட் அட்வுட்*

- புத்தகம்: நற்செய்தி (The Testament).
- 79 வயதான அட்வுட் என்பவர் தனது வாழ்க்கையின் இரண்டாவது புக்கர் பரிசினை வென்றுள்ளார்.
- "தி ஹேண்ட்மெய்ட்ஸ் டேல்" (1985) என்ற படைப்பிற்காக இவர் ஏற்கெனவே புக்கர் விருதினைப் பெற்றுள்ளார்.




## கலாச்சாரப் பாரம்பரியப் பாதுகாப்பிற்கான யுனெஸ்கோவின் ஆசியா - பசிபிக் விருதுகள்

- மும்பையின் பாரம்பரியப் பாதுகாப்பு இயக்கத்திற்கு ஒரு பெரிய அங்கீகாரமாக, மூன்று நகரங்களில் உள்ள அடையாளச் சின்னங்கள் இந்த ஆண்டின் கலாச்சார பாரம்பரிய பாதுகாப்பிற்கான யுனெஸ்கோவின் ஆசியா - பசிபிக் விருதுகளை வென்றுள்ளன.
- அவை ஃப்ளோரா பவுண்டெயின், பைக்குல்லாவில் உள்ள குளோரியா தேவாலயம் மற்றும் கலா கோதாவில் உள்ள கெனெசெத் எலியாஹூ ஜெப ஆலயம் ஆகியனவாகும்.
- பாரம்பரிய அமைப்புகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றை வெற்றிகரமாக மீட்டெடுத்துப் பாதுகாக்கும் தனி நபர்கள் மற்றும் தனியார் அமைப்புகளின் முயற்சிகளை இந்த விருது அங்கீகரிக்கின்றது.
- அகமதாபாத்தின் இந்திய மேலாண்மை நிறுவனத்தில் உள்ள விக்ரம் சாராபாய் நூலகமானது அதன் மறுசீரமைப்புக் கட்டிடக் கலைஞரான பிருந்தாவிற்காக "தனித்துவ விருதினைப்" பெற்றுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## சைமோன் பைல்ஸ் – உடற் பயிற்சி வல்லுநர்

- சைமோன் பைல்ஸ் என்பவர் தனது 25வது உலக சாம்பியன்ஷிப் பதக்கத்தை வென்றதன் மூலம் "மிகவும் புகழ்பெற்ற" உடற் பயிற்சி வல்லுநர், ஆண் அல்லது பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் நடத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டின் உலக ஜிம்னாஸ்டிக் சாம்பியன்ஷிப்பில் 'பேலன்ஸ் பீம்' மீதான அவரது சிறப்பான செயல்திறன் அவருக்கு 15.066 புள்ளிகளைப் பெற்றுத் தந்தது.
- பெலாரசைச் சேர்ந்த ஆண் உடற் பயிற்சி வல்லுநரான விட்டலி ஷெர்போ பெற்ற 23 பதக்கங்கள் என்ற நீண்டகால சாதனையை இவர் முறியடித்தார்.
- சைமன் பைல்ஸ் என்பவர் நடப்பு ஒலிம்பிக் சாம்பியன் ஆவார். இவர் ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் பெற்ற உடற் பயிற்சி வல்லுநர் ஆவார்.





# முக்கிய தினங்கள்

## அப்துல் கலாமின் பிறந்த நாள் / உலக மாணவர்கள் தினம் - அக்டோபர் 15

- உலக மாணவர்கள் தினமானது இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் பிறந்த தினமான அக்டோபர் 15 அன்று ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப் படுகின்றது.
- டாக்டர் கலாம் ஒரு அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியராக இருந்ததாலும் வேறு எதற்கும் முன்பாக ஆசிரியர் பணியில் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டதாலும் அவரது பிறந்த நாளில் இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- 2010 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அக்டோபர் 15 ஆம் தேதியை உலக மாணவர்கள் தினமாக அறிவித்தது.
- இஸ்ரோ மற்றும் டிஆர்டிஓவுடன் இணைந்து பணியாற்றியதற்காக 1981 ஆம் ஆண்டில் பத்ம பூஷண் என்ற விருதும் 1990 ஆம் ஆண்டில் பத்ம விபூஷண் என்ற விருதும் இந்திய அரசாங்கத்தினால் இவருக்கு வழங்கப்பட்டது.
- 1997 ஆம் ஆண்டில், இந்தியாவின் பாதுகாப்புத் தொழில் நுட்பத்தின் நவீனமயமாக்கல்

மற்றும் அறிவியல் ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு இவர் ஆற்றிய பங்களிப்பிற்காக 'பாரத் ரத்னா' என்ற விருது வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★